மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களுடைய கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்று, 49 புதிய வழித்தடங்களில் புதிய பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டிற்கு இயக்கி வைக்கப்பட்டு, இன்றைக்கு அந்தப் பேருந்துகள் மக்களுக்குச் சேவை ஆற்றிக் கொண்டிருக்கின்றன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள வழித்தடங்களில் மக்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப, பேருந்துகளுடைய பயன்பாட்டிற்கு ஏற்ப, துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, பேருந்து இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 278, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

278—

மீன் இறங்குதளம்

***21607—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஆசாத் நகரில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஆசாத் நகரில் மீன் இறங்குதளம் அமைத்திட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், கந்தபரிச்சான் ஆற்றில் கடல்நீர் கலப்பதைத் தடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை கடந்த 8—4—2013 ஆம் நாளன்று துணைக் கேள்விமூலம் கேட்டேன். நேற்றையதினம் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கந்தபரிச்சான் ஆற்றில் கடல்நீர் கலப்பதைத் தடுக்க ரூபாய் 3 கோடியில் ரெகுலேட்டர் அமைப்பதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பிலும், அப்பகுதி மக்களின் சார்பிலும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—40

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம் 29 ஊராட்சிகளையும், ஒரு பேரூராட்சியையும் கொண்ட ஒன்றியமாகும். இந்த ஒன்றியத்தில் தொண்டியக்காடு, இடும்பவனம், ஜாம்பானோடை, தில்லைவிளாகம், ஆலங்காடு, கற்பகநாதர்குளம், விளாங்காடு, முத்துப்பேட்டை பேரூராட்சி, பேட்டை, செம்படவன்காடு, துரைக்காடு, கீழவாடியக்காடு ஆகியவை மிகப் பெரிய அளவில் மீனவர்கள் வாழக்கூடிய பகுதிகளாகும். இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டுமென்றால், சுமார் 3 கி.மீ. தூரம் கோரையாற்றுக் கால்வாய் வழியாகச் செல்ல வேண்டும். அந்தக் கால்வாய் தூர்ந்துபோய் இருப்பதால், படகுகளை மீனவர்கள் தள்ளிச் செல்ல முடியாத சூழலும், பிடித்த கடல் மீன்களை கரைக்குக் கொண்டு வரமுடியாத சூழலும் ஏற்படுகின்றன. அங்குள்ள 1,000—க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆகவே, சென்ற 2012 ஆம் ஆண்டு, நான் இந்த அவையில் கேள்விகளைக் கேட்டபோது, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆனால்,

2013 ஏப்ரல் 19]

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், "மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை படிப்படியாக நிறைவேற்றப்படும்" என்று சொன்னார்கள். ஆகவே, இந்தச் சூழலில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முத்துப்பேட்டை, ஆசாத் நகரில் ஒரு மீன்பிடி இறங்குதளம் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையிலுள்ள துரைக்காடு மற்றும் ஆசாத் நகர் பகுதிகளில் சுமார் 85 கண்ணாடி நாரிழைப் படகுகள் மட்டுமே உள்ளன. இந்தக் கண்ணாடி நாரிழைப் படகுகளில் சுமார் 900 மீனவர்கள், கோரையாற்றில் சுமார் 9 கி.மீ. தூரம் சென்று, முத்துப்பேட்டை லகூனில் மீன் பிடித்துவிட்டுத் திரும்புகின்றனர். வனத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள ஜாம்பானோடை படகுத் துறையில் அலையாத்திக் காடுகள் 14 கி.மீ. தூரத்தில் ஆரம்பித்து, கடல் முகத்துவாரம் வரை சதுப்புக் காடுகளாக உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போன்று, கோரையாற்றின் நீளம் 13 கி.மீ. ஆகும். அலையாத்திக் காடுகள் நிரம்பியுள்ள அந்தப் பகுதி வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது; குறிப்பாக* reserve forest area*-வில் இருக்கிறது. ஆகவே, வனத் துறையின் அனுமதி பெற்று, பணிகள் செய்ய வேண்டியிருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஆசாத் நகர் பகுதியில் மீன்பிடி இறங்குதளம் அமைக்கத் தற்போது வாய்ப்புகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய இடத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அந்தப் பகுதியில் மீன்பிடி இறங்கு*

தளம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மேலும், மீனவர்கள் தங்கள் படகுகளுக்குப் பயன்படுத்தக்கூடிய டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றை எளிதில் பெறக்கூடிய வகையில் முத்துப்பேட்டையில் ஒரு டீசல் டேங்க் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்துப்பேட்டை, கோரையாற்றில், ஜாம்பானோடை, ஆசாத் நகர் பகுதிகள் reserve forest area–வில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் உரிய அனுமதியைப் பெற்று, சாலைகள் அமைக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். Reserve forest area–வில் இருக்கின்ற இடங்களைப் பெறுவதற்கு அனுமதி வாங்க வேண்டுமெனில், அதற்கு நிறைய சம்பிரதாயங்கள், formalities இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மீனவர்கள் உள்ளபடியே தொழில் செய்வதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். அந்தப் பகுதிகளில் எந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமெனினும், reserve forest–ன் அனுமதியைப் பெற்றுத்தான் செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இதனை எடுத்துச் சென்று, உரிய முயற்சிகள் எடுத்து, அந்தப் பணிகளை ஆரம்பிப்பதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முயற்சிக்கும் என்பதை இந்தநேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீன்பிடி இறங்குதளம் அமைக்க ஆவன செய்யப்படுமா என்று கேட்க வேண்டும். ஆனால், மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத சில கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். எனினும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதுகுறித்தும் சிந்திக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*